**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>**

**<u>H.M.O.P.No.11/2024</u>**

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | விநாயகம் |
| தகப்பனார் / கணவர் | .. | கோவிந்தன் |
| வயது | .. | 38 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | வாகை நத்தக் கொல்லை |
| தாலுக்கா | .. | வெம்பாக்கம் |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாள் புதன்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை:</u>**

வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 30.04.2017 ம் தேதியில் நடைபெற்ற திருமண அழைப்பிதழ் ம.த.சா.ஆ.1, மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமண புகைப்படம் ம.த.சா.ஆ.2, மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.த.சா.ஆ.3, 05.09.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் ம.த.சா.ஆ.4 ஆகும்.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**